# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2013 பிறந்தவர்கள்

**பின்வரும் 8 குறள்களை ஒப்பித்தல் செய்தல். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.**

1. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள் 16)
**விண்ணிலிருந்து மழைத்துளி விழுந்தாலன்றி மண்ணில் பசும்புல் தலை காண்பது அரிதான ஒன்றாகும்.**

2. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் 80)
**அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.**

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (குறள் 103)
**என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.**

4. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (குறள் 942)
**உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து, உணவு அருந்துகிறவர்களின் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.**

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவ(ற்கு)
அணியல்ல மற்றுப் பிற. (குறள் 95)
**அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர,ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.**

2013 பிறந்தவர்கள்

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் 467)

**எந்தச் செயலையும் நன்றாகச் சிந்தித்துத் துணிவு கொள்ள வேண்டும்; துணிந்த பின்பு 'இதனைச் செய்வோமா' என்று எண்ணுவது குற்றமாகும்.**

7. குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகநாடி மிக்க கொளல். (குறள்504)

**ஒருவருடைய நல்ல குணங்களையும் ஆராய்ந்து, தீய குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் எவை அதிகம் என்பதை எடைபோட்டுத் தெளிய வேண்டும்.**

8. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (குறள் 786)

**முகம் மட்டும் மலர்ந்து சிரித்துப் பழகுவது நட்பு அன்று; நெஞ்சில் உண்மையான அன்போடு அகமும் மலர்ந்து பழகுவதே உண்மையான நட்பாகும்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.